All Rights Reserved முழுப் பதிப்புரிமையுடையது සියලු ම හිමිකම් ඇවිරිණි

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education – Western Province

**පළමුවන වාර ඇගයීම**
**முதலாம் தவணை மதிப்பீடு - 2018**
**First Term Evaluvation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: **6** | විෂයය / பாடம் / Subject: **கணிதம்** | පත්‍රය / வினாத்தாள் / Paper: **I, II** | කාලය / காலம் / Time: 2 **மணித்தியாலயம்** |

**பெயர்** :-.................................................... **சுட்டெண்** :-....................................................

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

01. வட்டவடிவம் காணப்படும் பொருட்கள் இரண்டு எழுதுக..

.......................................................................................................................................

02. தரப்பட்ட எண்ணை சொற்களில் எழுதுக.

1 000 001 -..........................................................................................................

03. கழித்து எழுதுக

2000 – 648 = ...............................

04. பெருக்கி எழுதுக

648 x 10 =................................

05. நிமிடங்களில் எழுதுக

2 மணித்தியாலம் = .................................

06. தரப்பட்ட நேரத்தை சர்வதேச நியம முறையில் எழுதுக.


பிப.2. 15 = ....................................

07. கூட்டி எழுதுக

| நிமிடம் | செக்கன் |
|---|---|
| 6 | 13 |
| 2 | 32 |
| | |

08. பி.ப. 2.05 இற்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட பஸ்வண்டி ஒன்று பி.ப. 3.40 இற்கு களுத்துறையைச் சென்றடைந்தது. பயணத்திற்கு எடுத்த காலம் யாது?

09. (-1), 3 என்பவற்றை தரப்பட்ட எண்கோட்டிற் குறித்துக் காட்டுக..




10. இறங்கு வரிசையில் எழுதுக..

2 , 0 , -1, 3 ................................................

11. கிட்டிய 10 இற்கு மட்டம் தட்டி எழுதுக.

45 - …………………………………..

12. பின்வருவனவற்றில் கோணங்களைக் குறிக்கும் உருக்களின் கீழ் கோடிடுக..



13. உபதிசைகள் யாவை?.

…………………………………………………………………………………………………….

……………………………………………………………………………………………………..

14. கிடைத்தளம் ஒன்றைச் சரிபார்ப்பதற்கு உபயோகிக்கப்படும் உபகரணத்தின் பெயர் யாது?.

15. எண்ணில் எழுதுக..

“நூற்றிஇரண்டாயிரத்து இருநூற்று இருபத்தெட்டு”

16. பிரித்தெழுதுக

162 ÷ 3

17. நிமிடங்கள் செக்கனில் எழுதுக.

125 செக்கன்கள் - …………………………………………….

18. 1628 என்னும் எண்ணில் 6 குறிக்கும் இலக்கத்தின் பெறுமதி யாது?.

19. இன்றைய திகதியை நியம வடிவில் எழுதுக..

20. சொற்களில் விபரிக்க.

(i). $4 > 2$ = ……………………………………………………………….

(ii). $-2 < 1$ = ……………………………………………………………….

- முதலாம் வினாவிற்கும் மேலும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.
- விடைகளை வேறொரு தாளில் எழுதுக..

---

01. (*a*) பின்வருவனவற்றின் வினா இலக்கங்களை உமது விடைத்தாளில் பிரதிபண்ணி சரியாயின் "T" எனவும் பிழையாயின் "F" எனவும் எழுதுக..


i. ஒரு மணி நேரத்தில் நிமிட முள் ஒரு முழுச்சுற்று சுழரும்.
ii. நண்பகல் 12 மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்கும் இடைப்பட்ட நேரமானது முற்பகல் எனக் குறிக்கப்படும்.
iii. செங்கோணத்திலும் குறைந்த கோணமானது கூர்ங்கோணம் என அழைக்கப்படும்..
iv. திசைகளை அறிவதற்கு திசையறிகருவி பயன்படுத்தப்படும்
v. பாத்திரமொன்றிலுள்ள நீரின் மேற்பரப்பானது நிலைக்குத்தானது..

(b) சுருக்குக.

i. 4878 + 299 ii. 2007 – 199 iii. 362 x 32 iv. 3211 ÷ 19


(c) ஒரு தடவைக்கு 45 பயணிகள் பஸ் வண்டி ஒன்றில் பிரயாணம் செய்யமுடியும். 592 பயணிகள் பிரயாணம் செய்வதற்கு எத்தனை பஸ்வண்டிகள் தேவை?

02. தரப்பட்ட எண்கோடானது 5 பிள்ளைகளின் வயதுகளைக் குறித்துக் காட்டியுள்ளது.




i. வயதில் மூத்தவர் யார்?
ii. B யின் வயது யாது?
iii. சமவயதுள்ள பிள்ளைகள் யாவர்?
iv. C,F என்பவர்களின் வயதுகளை ">" என்னும் குறியைப் பயன்படுத்தி தொடர்புபடுத்துக.
v. A யைப்போல் 4 மடங்கு வயதுள்ள பிள்ளை யார்?
vi. H என்பவரின் வயது 10 வருடங்களாகும். எண்கோடு ஒன்று வரைந்து அதனைக் குறிக்க.

03. *a* தொடங்கி h லரை பெயரிடப்பட்ட 8 கோணங்களின் உருக்கள் தரப்பட்டுள்ளது. பின்வரும் வினாக்களுக்கு பெயரிடப்பட்ட எழுத்துக்களைப் பயன்படுத்தி விடை எழுதுக..





i. கூர்ங்கோணங்களைக் குறிக்கும் எழுத்துக்கள் யாவை?.
ii. விரிகோணங்களைக் குறிக்கும் எழுத்துக்கள் யாவை?.
iii. h என்பது எவ்வகைக்கோணம்?
iv. இரு செங்கோணங்களின் அளவுகளையுடைய கோணம் யாது?
v. ஒருவன் வடக்கிலிருந்து கிழக்கிற்கு திரும்புவானாயின் அதனைக் குறிக்கும் கோணம் யாது?.

04. *(a)* நான்கு பிரதான திசைகளையும் எழுதுக.

(b) எமது அன்றாட வாழ்க்கையில் திசைகளை உபயோகிக்கும் சந்தர்ப்பங்கள் 2 எழுதுக.

(c) $A$ தொடக்கம் $G$ வரை உள்ள எழுத்துக்கள் பாடசாலையிலுள்ள ஏழு நிலைகளைக் குறித்துக் காட்டுகிறது. .




i. A யிற்கு வடக்ே கஉள்ள நிலை யாது?

ii. E என்பது A யிற்கு எத்திசையிலுள்ளது?

iii. இடைவெளி நிரப்புக.

a. $D$ என்பது $A$ யிற்கு --------------------------- அமைந்துள்ளது

b. ------------ யும் --------- யும் C யிற்கு வடக்கே அமைந்துள்ளன.

05. (a) அன்றாட வாழ்க்கையில் ''மதிப்பிடல்'' பயன்படுத்தும் இரு சந்தர்ப்பங்கள் எழுதுக.

(b) வகுப்பு ஒன்றிலுள்ள மாணவர்களை கிட்டிய 10 இல் மட்டந்தட்டிப் பெறப்பட்ட எண் 30 ஆகும்.

(i) அவ் வகுப்பிலுள்ள மாணவர்களின் மிகக் குறைந்த எண்ணிக்கை யாது?

(ii) அவ் வகுப்பிலுள்ள மாணவர்களின் மிகக் கூடிய எண்ணிக்கை யாது?

(c ) தொழிற்சாலை ஒன்றிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையை கிட்டிய 10 இல் மட்டந்தட்டியபோது 50 ஆகும். மேலும் 9 தொழிலாளர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டபின் கிட்டிய 10 இற்கு மட்டந் தட்டியபோது மீண்டும் 50 ஆகும். ஆரம்பத்தில் இருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது?

06. (a) 2, 5, 9 என்பவற்றிலிருந்து பொருத்தமான எண்களை தெரிந்தெடுத்து இடைவெளி நிரப்புக.

i) $5 <$ …………….. ii) $5 >$ ………………… iii) $5 =$ …………………..

(b) -3 இற்கும் 2 இற்கும் இடையே உள்ள நிறையெண்கள் அனைத்தையும் எழுதுக..


(c) -5 இற்கும் 1 இற்கும் இடையேயுள்ள மறைநிறை எண்களை இறங்கு வரிசையில் எழுதுக.

07. (a) தரப்பட்ட உருவில்,

i) வட்டத்தின் உள்ளே உள்ள புள்ளிகளை எழுதுக.

ii) வட்டத்திற்கு வெளியே உள்ள புள்ளிகளை எழுதுக..

iii) வட்டத்தில் உள்ள புள்ளிகளை எழுதுக.




(b) சுருக்கி எழுதுக.

i)

| | மணி | நிமி |
|---|---|---|
| | 3 | 12 |
| + | 4 | 27 |

ii)

| | நாள் | மணி |
|---|---|---|
| | 2 | 20 |
| + | 3 | 15 |

iii)

| | மணி | நிமி |
|---|---|---|
| | 4 | 15 |
| - | 2 | 25 |